செய்தி வெளியீடு எண்: 542 நாள் : 09.10.2013

**<u>செய்தி வெளியீடு</u>**

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. ப. மோகன் அவர்கள் தொழிற் கூட்டுறவு சங்கங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்களுக்கான புத்தாக்கப் பயிற்சியினை துவக்கி வைத்து உரையாற்றினார்.**

----

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க இன்று (9.10.2013) காலை 10 மணியளவில் சென்னை, மந்தைவெளி, தொழில் வணிக துறை அலுவலக கூட்ட அரங்கில் தொழிற் கூட்டுறவு சங்கங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்களுக்கான புத்தாக்கப் பயிற்சியினை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. ப. மோகன் அவர்கள் உரையாற்றியதாவது

தொழிற் கூட்டுறவு சங்கங்கள் மாநிலத்தில் சிறு மற்றும் குடிசைத் தொழில்களை மேம்படுத்துவதிலும் ஊரகப்பகுதியில் உள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்குவதில் முக்கிய பங்காற்றுகின்றன. இவற்றில் தேயிலை கூட்டுறவு சங்கங்கள், கயிறு கூட்டுறவு சங்கங்கள், சேகோசர்வ், தாய்கோ வங்கி, கூட்டுறவு தொழிற்பேட்டைகள், ஆட்டோ ஒட்டுநர் சங்கங்கள், அச்சக சேவை சங்கங்கள், ஒப்பந்த தொழிலாளர் சங்கங்கள், கைவினைப் பொருட்கள் தயாரிக்கும் சங்கங்கள் ஆகியவை குறிப்பிடத்தக்கதாகும். இவ்வகையான சங்கங்கள் சமூக மேம்பாடு குறிக்கோளுடன் நலிவடைந்த பிரிவினரை இடைத்தரகர்களின் பிடியிலிருந்து விடுவித்து அவர்களை பொருளாதார ஏற்றத்தாழ்விலிருந்து காப்பாற்றி, சமூக மேம்பாடு அடைய உதவிப் புரிகிறது. இத்தொழிற் கூட்டுறவு சங்கங்கள் ஊரகக் கைவினைஞர்கள், திறனாளிகள், பகுதி–திறனாளிகள் மற்றும் தொழிலாளர்களுக்கு பயனுள்ள வேலை வாய்பினை வழங்கி வருவதுடன், சிறு தேயிலை விவசாயிகள் மற்றும் மரவள்ளிக் கிழங்கு பயிரிடுவோருக்கு நியாயமான விலை கிடைப்பதற்கும் உதவி செய்கின்றன. இச்சங்கங்கள் குறு மற்றும் சிறு தொழில் முனைவோர்களுக்கு அடிப்படை வசதிகளுடன் கூடிய மேம்படுத்தப்பட்ட மனைகள் மற்றும் தொழிற் கூடங்களை வழங்குகின்றன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

மேலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய போது, தொழில் வணிகத் துறையின் கீழ் தற்பொழுது 339 தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 21 சங்கங்கள் புதியதாக துவக்கப்பட்டவைகளாகும். இந்த 339 சங்கங்களில், 259 சங்கங்கள் இலாபத்திலும், 29 சங்கங்கள் நட்டத்திலும் இயங்கி வருகின்றன. 30 சங்கங்கள் செயல்படா நிலையிலுள்ளன. புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சங்கத்தின் தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் இயக்குநர்கள் ஆகியோர் அரசு அலுவலர்களுடன் கலந்து ஆலோசித்து நட்டத்தில் இயங்கும் சங்கங்களை இலாபத்தில் இயக்கவும், செயல்படாத நிலையில் உள்ள சங்கங்கள் செயல்பட உரிய முயற்சி செய்திட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

தமிழ் நாட்டிலுள்ள அனைத்து கூட்டுறவு சங்கங்களுக்கும் நீண்ட காலமாக தேர்தல் நடத்தப்படாமல் இருந்தது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த சீரிய நடவடிக்கையால் தான் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகத்தை அமைப்பதற்காக, தமிழ் நாட்டிலுள்ள அனைத்து கூட்டுறவு சங்கங்களுக்கும் சமீபத்தில் தேர்தல் நடத்தப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகம் அமையப்பெற்றுள்ளது என்பதனை தெரிவித்ததோடு, தொழிற் கூட்டுறவு பிரிவில் மொத்தம் 325 சங்கங்களுக்கு தேர்தல் நடத்தப்பட்டது. அதில் 312 பிரதம கூட்டுறவு சங்கங்களும், 11 மத்திய கூட்டுறவு சங்கங்களும், 2 தலைமை கூட்டுறவு சங்கங்களும் அடங்கும். இத்தேர்தல் மூலம் 325 சங்கங்களுக்கு மொத்தம் 2821 நிர்வாகக் குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். சங்க நிர்வாகத்தில் அனைத்து தரப்பினரும் இடம் பெற வேண்டும் என்ற நோக்கில் 30 சதவீதம் பெண்களும், 18 சதவீதம் தாழ்த்தப்பட்ட இனத்தை சார்ந்தவர்களும் சங்க நிர்வாகத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளனர் என்று தெரிவித்தார்.

தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகளுக்கு தங்களது கடமைகள், பொறுப்புக்கள், உரிமைகள் ஆகியவற்றைப்பற்றி விவரமாக எடுத்து கூறுவதற்கும், தமிழ் நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் 1983 மற்றும் விதிகள் 1988 ஆகியவற்றிலுள்ள சட்ட கூறுகளை அறிந்து கொள்வதற்கும், கூட்டுறவுச் சங்கங்களின் கணக்கு மற்றும் தணிக்கை முறைகளை தெரிந்து கொள்வதற்கும், நிர்வாக குழுவின் உரிமைகள், கடமைகள், பொறுப்புகள் தெரிந்து கொள்வதற்கும், சங்கத்தின் அன்றாட நடவடிக்கைகளில் நிர்வாகிகளின் பங்கு பற்றி அறிந்து கொள்வதற்கும் தமிழ் நாட்டிலுள்ள அனைத்து தேர்ந்தெடுக்கப்பட்ட சங்க நிர்வாகிகளுக்கு ஒரு புத்தாக்க பயிற்சித் திட்டத்தினை ஏற்பாடு செய்ய உத்தேசிக்கப்பட்டு, இதன் அடிப்படையில், முதன்முதலாக சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள் அடங்கிய சென்னை மண்டலத்திற்கான புத்தாக்கப் பயிற்சி இன்று இங்கே சிறப்பாக நடைபெற்று வருகிறது.

கூட்டுறவு செயல்பாடுகளில் திறன் படைத்த அலுவலர்களால் ஒரு நாள் முழுவதும் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. இந்த பயிற்சியினை ஒரு நல்வாய்ப்பாக பயன்படுத்திக் கொண்டு, தாங்கள் சார்ந்துள்ள தொழிற் கூட்டுறவு சங்கத்தினை நீங்கள் அனைவரும் வெற்றிகரமாக கொண்டு சென்று, சங்க அங்கத்தினர்களுக்கு வேண்டிய உதவிகளை செய்திடுமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார். அப்போது, குறு , சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் மற்றும் தொழில் வணிக துறை ஆணையர் / இயக்குநர் திரு. கி. தனவேலு, இ.ஆ.ப., தொழில் வணிகத்துறை கூடுதல் ஆணையர் திருமதி. ரீட்டா ஹரீஷ் தாக்கர், இ.ஆ.ப., மற்றும் தொழிற் கூட்டுறவு சங்கத் தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள் உடன் இருந்தனர்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க இன்று 9.10.2013 காலை 10 மணியளவில் சென்னை, மந்தைவெளி, தொழில் வணிக துறை கூட்ட அரங்கில் தொழிற் கூட்டுறவு சங்கங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்களுக்கான புத்தாக்கப் பயிற்சியினை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. ப. மோகன் அவர்கள் துவக்கி வைத்து உரையாற்றினார். அப்போது குறு , சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் மற்றும் தொழில் வணிக துறை ஆணையர் / இயக்குநர் திரு. கி. தனவேலு, இ.ஆ.ப., தொழில் வணிகத்துறை கூடுதல் ஆணையர் திருமதி. ரீட்டா ஹரீஷ் தாக்கர், இ.ஆ.ப., மற்றும் தொழிற் கூட்டுறவு சங்கத் தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள் உடன் இருந்தனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9